# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 26 | 10-03-2003 | திங்கட்கிழமை | ஓசை 20



வசந்தம் வீசும்
புடைவை உலகில் உங்களின்
நட்புக்கு.....
சாந்தா ரெக்ஸ்
பஜார் வீதி, வவுனியா
T.P:24-22879


# களுத்துறை தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவாக

# வடக்கு - கிழக்கில் தொடர் போராட்டங்கள்

## இன்று யாழ். இலும் நாளை வவுனியாவிலும் மறியல், உண்ணாவிரதத்திற்கு ஏற்பாடுகள்

**களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வடக்கு - கிழக்கு மாகாணங்கள் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன. இன்று யாழ். குடாநாட்டில் மறியல் போராட்டமும் நாளை வவுனியாவில் உண்ணாவிரதப் போராட்டமும் நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பொது அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன.**

இன்று யாழ். மாவட்ட செயலகம் முன்பாக காலை 10.00 மணி தொடக்கம் 11.30 மணி வரை மறியல் போராட்டம் நடத்தப்படவுள்ளது. நாளை வவுனியா மாவட்டத்தில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு இப்பகுதி வெகுசன அமைப்புக்கள் ஏற்பாடு செய்துள்ளன.

இதேவேளை, களுத்துறைச் சிறைச்சாலை தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி நடத்திவரும் உண்ணாவிரதப் போராட்டம்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆதரவாக

## தமிழ் ஆசிரியர் சங்கம் நாளை பகிஷ்கரிப்புப் போராட்டம்

அகில இலங்கை தமிழாசிரியர் சங்கம் நாளை நடாத்துவதாக இருந்த சுகவீனப் போராட்டம் அதே தினத்தில் பூரண - கர்த்தாலாக அனுஷ்டிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆதலால் நாளை வன்னியில் வாழும் அனைத்து அதிபர்களும், ஆசிரியர்களும் பாடசாலை செல்லாது பகிஷ்கரித்து, தாய்ச் சங்கத்தின் கோரிக்கைகள் வெற்றிபெற ஒத்துழைப்பு நல்குமாறும் சங்கம் வேண்டியுள்ளது.

'குறிப்பாக பல ஆண்டு சேவைகள் செய்து வந்த, நியமனத்தை இன்று இழந்து தவிக்கும் தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்கு எமது போராட்டம் உயிர் கொடுக்கும் என எதிர்பார்க்கின்றோம் என வன்னி தமிழ் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தொண்டர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### சமாதான முயற்சிகள் குறித்து

## நோர்வே வெளியுறவு அமைச்சர் சிறில. எதிர்க்கட்சிகளுடன் பேச்சு

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதன் அவசியம் குறித்து சிறிலங்கா வரவுள்ள நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேசவுள்ளார்.

இதற்கிணங்க சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ஷ ஆகியோரை இவர்கள் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று சமாதானப் பேச்சுவார்த்தையில் எதிர்க்கட்சிகள் பங்கெடுக்க விரும்பினால் அது குறித்தும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து படையினருக்குப் பீரிஸ் விளக்கம்



(வவுனியா)

இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு உகந்தது அல்ல எனவும் அரசியல் தீர்வே இறுதியானதும், சாத்தியமானதுமாகும் என்று அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார். இதன்அடிப்படையிலேயே விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இதனையிட்டு ஆயுதப்படையினர் எந்தவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவித்த அமைச்சர் இனப்பிரச்சினைக்கு ஓர் நல்ல தீர்வு ஏற்படவேண்டும் என்று அரசாங்கம் விரும்புவதாகவும் இதற்கு படைத்தரப்பினர் பூரண ஒத்து

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாம்!

### எச்சரிக்கை செய்கிறது ம.ஐ.முன்னணி

(கொழும்பு)

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை நாட்டு மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக மக்கள் ஐக்கிய முன்னணி எச்சரிக்கை செய்துள்ளது. கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன, விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதங்களைக் கைவிடும்வரை அவர்களை நம்பமுடியாது எனத் தெரிவித்துள்ளார். மக்கள் ஐக்கிய முன்னணியின் 18 வது தேசிய மாநாடு நேற்று நடைபெற்றபோது, உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு உடன்பாட்டை அமுல் செய்ய அரசு தவறிவிட்டது!

### 'ரெலோ' செயற்குழுவில் கண்டனத் தீர்மானம்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்கும் பல விடயங்களை நிறைவேற்ற சிறிலங்கா அரசு தவறிவிட்டது என 'ரெலோ' வின் செயற்குழுக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த செயற்குழுக் கூட்டம் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தி அடைந்துள்ள நிலையிலும் அதில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள் சிறிலங்கா அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவில்லை.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அகதிகள் மீள்குடியேற்றம் மறுக்கப்பட்டுவருவதுடன்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### விபத்தில் இருவர் காயம்

இரணைமடுச் சந்திக்கும் முறிகண்டிக்கும் இடையில் ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று துவிச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ நீதிமன்ற வளாகம் கிளி.யில் நாளை திறப்பு

### சமகால அரசியல் நிலை குறித்து அன்ரன் பாலசிங்கம் உரை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள தமிழீழ நீதிமன்ற வளாகம் நாளை திறந்து வைக்கப்படவுள்ளது. இவ்வளாகத்தைத் திறந்து வைக்கவுள்ள அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இந்நிகழ்வில் சமகால அரசியல் நிலை பற்றிச் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

மாவட்ட நீதிமன்று, குடியியல் நீதிமன்று, குற்றவியல் நீதிமன்று, மேல்முறையீட்டு நீதிமன்று, சட்டவாக்கம், சட்டக்கல்லூரி ஆகியவற்றினை உள்ளடக்கியதாக இவ் வளாகம் நாளை காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவுக் கடலில் மூழ்கி யாத்திரிகர் ஒருவர் மரணம்

கச்சதீவு அந்தோனியார் பெருநாளுக்குச் சென்ற நெடுந்தீவு வாசி கச்சதீவுக் கடலில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் படகிலிருந்து இறங்கும்போது இவர் கடலில் மூழ்கி மரணமடைந்துள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான நா.ரவிச்சந்திரன் (வயது-39) என்பவரே மரணமடைந்தவராவார்.

ஐநூறிற்கும் மேற்பட்டோர் கச்சதீவு அந்தோனியார் திருநாளில் கலந்து கொண்டனர். இந்தியாவிலிருந்தும் ஐந்து படகுகளில் யாத்திரிகர் வந்திருந்ததாக தெரி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Pentiuam - 4 Computer, Panasonic V.CD/ A.C.D Player உண்டு. தொடர்புகளுக்கு: தங்கமாளிகை, யாழ் சாலை கிளிநொச்சி. (3007)

### கடைக்காணி விற்பனைக்கு

கிளிநொச்சி கச்சேரி அருகாமையில் பிரதான வீதியில் கடைக்குரிய காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி சாறிஎம் போறியம்,கச்சேரி முன்பாக.(3008)

உ
சிவமயம்

### கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயப் பொங்கல் தினத்தில் வியாபாரம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான அறிவித்தல்

மேற்படி 18-03-2003 ஆண்டுற்சவ பங்குனிப்பொங்கல் தினத்தில் ஆலய வீதிகளில் வாணிபம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கு எதிர்வரும் 11-03-2003 செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு ஆலய காரியாலயத்தில் நில ஏலவிற்பனை நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

பரிபாலன சபையினர்.

(சி-8005)

### பிற்போடப்பட்டது

11-ம் திகதி நடைபெறவிருந்த கிளிபரந்தன் இந்து மகா வித்தியாலய மாணவர்களின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

இது 12-ம் திகதி புதன்கிழமை நடைபெறும் என வித்தியாலய அதிபர் ம.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

### வருடாந்த மகோற்சவம்

மல்லாவியில் யோகபுரம் யோகாம்பிகா சமேத யோக புரநாதர் சுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது. பங்குனி 17 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் விசேடமாக நடைபெறவுள்ளது.

### தனியார் கல்வி நிலைய பொதுக் கலந்துரையாடல்

வன்னிப் பெருநிலப்பரப்பில் இயங்கிவரும் தனியார் கல்வி நிலையங்கள், தொழில்சார் பயிற்சி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள், நிர்வாகிகள் 15-03-2003 அன்று கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பி.ப 2.00 மணிக்கு நடைபெறும் பொதுக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

குறிப்பு:-

**15-03-2003 சனிக்கிழமை தனியார் கல்வி நிலையங்கள் தொழில்சார் பயிற்சி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் யாவற்றையும் நிறுத்தி ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.**

**தனியார் கல்வி நிர்வாகப் பிரிவு,**
**அரசியல்துறை,**
**தமிழீழ விடுதலைப் புலிகள்,**
**தமிழீழம்.**

(சி-8003)

### கிளிநொச்சி - உருத்திரபுரம் - பூநகரி - பள்ளிக்குடா பேருந்துப்பணி கிளிநொச்சி - பரந்தன் - பூநகரி - பள்ளிக்குடா பணியாக மாற்றம்

**மேற்படி பணி 12-03-2003 ஆம் நாள் தொடங்கி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனைப் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.**

**கிளிநொச்சி – பரந்தன் – பள்ளிக்குடா**

நேர ஒழுங்கு,

| கிளிநொச்சி - | பரந்தன் - | குஞ்சுப்பரந்தன் - | தம்பிராய் - | 4ஆம் கட்டை - | பள்ளிக்குடா. |
|---|---|---|---|---|---|
| மாலை 03.30 | 03.45 | 04.00 | 04.50 | 05.05 | 05.30 |

**பள்ளிக்குடா – பரந்தன் – கிளிநொச்சி**

நேர ஒழுங்கு,

| பள்ளிக்குடா - | 4ஆம் கட்டை - | தம்பிராய் - | குஞ்சுப்பரந்தன் - | பரந்தன் - | கிளிநொச்சி . |
|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.25 | 07.40 | 08.30 | 08.45 | 09.00 |

**முகாமையாளர்,**
**பேருந்துப் பகுதி, கிளிநொச்சி.**

(சி-8007)




● உறவுகளோடு உரையாட...
● உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள...
● வாணிபத்தகவல் பரிமாற்றத்தை விரைவுபடுத்த...

**வன்னி வாழ் மக்களின் நலன் கருதி**

இன்று முதல் உங்கள் உள்ளங்கைகளிலும்
உலகத்தைக் கொண்டுவருகிறான்



**வன்னியன் தொலைத் தொடர்பு நிலையம்**
**VANNIAN COMMUNICATION CENTRE**

■ உள்நாட்டு, வெளிநாட்டு அழைப்புக்கள் சில மணித்துளிகளில் உங்கள் செவியில்...
■ நவீன தொழில்நுட்பத்துடனான தொலைத்தொடர்புக் கருவிகள் மூலம் தெளிவான அலைவரிசையூடாக உரையாடல்...
■ வெளிநாட்டு அழைப்புக்களை உங்களின் வீட்டுவாசல் வரை வழங்கும் பணி...

வன்னியனின் சிறப்புப் பணி... (இன்ரநெற் இணைப்பு)

வெகுவிரைவில் வெளிவரவுள்ள (G.C.E. O/L)

க.பொ.த. சாதாரணதரப் பெறுபேற்றை கொழும்பில் வெளியாகி ஒரு மணி நேரத்தில் இன்ரநெற் ஊடாக உங்களின் கையில் கிடைக்கச்செய்வோம். மேலதிக விளக்கங்கள் பெற நேரில் தொடர்பு கொள்ளவும்.



**வன்னியன்**

A-9 வீதி. கிளிநொச்சி. (2271) 1-9 தங்ககம் அருகாமையில்.

# அமெரிக்கா இறுதிக் காலக்கெடு அறிவிப்பு

# தாக்குதல் எவ்வேளையும் ஆரம்பமாகலாம்!

**ஈராக் முழுமையான ஆயுதக்களைவை மேற்கொள்ள அமெரிக்கா குறுகிய கால அவகாசமொன்றை அறிவித்துள்ளது. இதன் பின்னர் அமெரிக்கா எந்த வேளையிலும் ஈராக் மீது தாக்கலாம் என அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.**

குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் ஈராக் சரிவர நடந்து கொள்ள வேண்டும். இது குறித்து பொறுப்புடன் நடந்து கொள்ள தவறும் பட்சத்தில் எவ்வேளையிலும் தாக்குதல் நடத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எந்தவேளையிலும் அமெரிக்கா தனது ஆதரவு நாடுகளுடன் ஈராக்கிற்குள் பிரவேசிக்கலாம் என அமெரிக்க சனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஐ.நா.வில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் வெற்றி பெறாத பட்சத்திலும் அமெரிக்கா தனது முடிவை விட்டு கீழிறங்கப் போவதில்லை என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, ஈராக்கிற்கு எதிரான தமது செயற்பாட்டை ஐக்கிய அமெரிக்காவும், பிரிட்டனும் முனைப்போடு மேற்கொண்டு வருகின்றார்கள். மத்திய கிழக்குப் பிரதேசத்தில் இரண்டு லட்சம் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இரு நாடுகளிலிருந்தும் நாள் ஒன்றுக்கு 500 யுத்த விமானங்கள் ஈராக்கின் வான் பரப்பில் ரோந்து செல்வதாக அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். விமானப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்ட ஆகாய வலயம் 1991ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆயினும், இதனை ஈராக் எப்போதும் அங்கீகரித்து செயற்படவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.


இதேவேளை, ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டால் ஈராக் இஸ்ரேலின் பிரதான நகரங்கள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் என இஸ்ரேல் அஞ்சுகின்றது. 1991ஆம் ஆண்டு ஈராக் தாக்கப்பட்ட வேளையில் இஸ்ரேலின் முக்கிய நகரங்களின் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டமை தெரிந்ததே.

இந்நிலையில், ஈராக் தொடர்பாக இரண்டாவது தீர்மானத்திற்கு எதிராக ரஷ்யா, சீனா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தொடர்ந்தும் குரல் எழுப்பி வருகின்றன. அத்துடன், ஈராக்கின் ஆயுதச் சோதனைகளை மேற்கொள்ள மேலும் போதிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என அந்நாடுகள் வலியுறுத்துகின்றன.



அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவலும், சர்வதேச அணு சக்தி ஏஜென்சியின் தலைவர் முகமட் எல் பராய்டியும் கலந்துரையாடுவதைக் காண்க.





கடந்த 7ஆம் திகதி பாதுகாப்புச் சபையில் பரிசோதகர் குழுவினரால் ஈராக் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட வேளையில்.....

## அமெரிக்கப் படையினர் தொடர் தேடுதல் ஆறு ஆப்கானியர்கள் கைதாகித் தடுப்பு!

(காபூல்)

அமெரிக்கப் படை வீரர்கள் ஆப்கானிஸ்தானில் ஒசாமா பின்லேடனையும் அவரது அல்கைதா



இயக்க உறுப்பினர்களையும் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

அண்மையில், இவர்கள் மேற்கொண்ட தேடுதலின்போது அல்ஹைதா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் 07 பேரைக் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் ஆப்கானிஸ்தானிலுள்ள படைகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. குண்டுகள் தயாரிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## கமாஸ் உறுப்பினர் இருவர் பலி

இஸ்ரேலியப் படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதலில் கமாஸ் இயக்கத்தினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

காரில் பயணம் செய்த இவர்கள் மீது இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட 'ரொக்கெட்' தாக்குதலில் இவர்கள் உயிரிழந்துள்ளனர் என இஸ்ரேலியப்படைத்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## ஆளும் கட்சி உறுப்பினர்கள் ரொனி பிளேயருக்கு எச்சரிக்கை

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் சபையில் இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்படாமல் ஈராக் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அரசாங்கத்திலிருந்து விலகப் போவதாக பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் 05 பேர் அறிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் அதிகாரத்தை மீறும் செயலை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, ஐக்கிய நாடுகளின் அனுமதியின்றி ஈராக் மீது நடத்தப்படக்கூடிய தாக்குதலுக்கு எதிராக பிரிட்டனின் ஆளும் தொழிற் கட்சிக்குள்ளிருந்து கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. இதனால், பிரதமர் ரொனி பிளேயரின் ஆட்சிக்கு பாதிப்பு ஏற்படலாம் என பிரிட்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜப்பானிய கடற்பகுதியில் ஏவுகணைப் பரிசோதனை

(சியோல்)

வடகொரியா அடுத்த ஓரிரு நாட்களில் ஜப்பானின் கடற்பிராந்தியத்தில் ஏவுகணை ஒன்றைப் பரிசோதிக்கவுள்ளதாகத் தென்கொரிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு வலயமாக ஜப்பான் பிரகடனம் செய்துள்ள கடற்பகுதியிலேயே வடகொரியா ஏவுகணையைப் பரிசோதிக்கவுள்ளதாகத் தென்கொரிய பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் கப்பல் சேவைகளைத் தடுக்கும் நோக்கில் வடகொரியா இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## ஈராக் தூதரை வெளியேற அவுஸ்திரேலியா உத்தரவு

அவுஸ்திரேலியா தனது நாட்டிலுள்ள ஈராக்கிய தூதுவரை நாட்டை விட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது.

சிட்னி நகரிலுள்ள ஈராக்கிய தூதரகத்தில் கடமையாற்றும் இப்ராகிம் ஆரிசை புதன்கிழமையளவில் நாட்டை விட்டு வெளியேறுமாறு அவுஸ்திரேலிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கருத்து வெளியிடுகையில் ஈராக்கிற்கு எதிராக உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் இந்த இராஜதந்திரி வெளியேற்றப் படுவதாகத் தெரிவித்துள்ளார்.

## ஈராக் போரைத் தடுக்க இறுதிவரை முயல வேண்டும்

### - இந்தியப்பிரதமர் வலியுறுத்து

(புதுடில்லி)

ஈராக் மீது போர் தொடங்குவதைத் தவிர்க்க இறுதிவரை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈராக் பற்றி ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ள பிரதமர் போர் மேகங்கள் சூழ்ந்து காணப்படடாலும் எப்போது போர் வரும் என்பதை எவராலும் கூறமுடியாது உள்ளதாக தெரிவித்துள்ளார்.

## கச்சதீவில் மீன்பிடிக்க புதிய ஒப்பந்தம் வேண்டும்

### - மாநில அமைச்சர் கோரிக்கை

(சென்னை)

இந்திய மீனவர்களுக்கு கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்கும் உரிமையை சிறிலங்கா அரசு வழங்கும் விதத்தில் அந்த நாட்டுடன் இந்தியா புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும் என தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மத்தியரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் இராமநாதபுரத்தில் உலக மகளிர் தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசும்போது கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார்.

# நெற் பயிரைத் தாக்கும் எரிபந்தம், மடல் வெளிறல் நோய்கள்


தற்போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினை எரிபந்த நோயின் தாக்கமும், மடல் வெளிறல் நோயின் தாக்கமுமாகும். இந் நோய்கள் நெல்வயல்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. இந் நோய்கள் பங்கசுவால் ஏற்படுகின்றது. பங்கசின் பெயர், பைரிக்கிலேறியா ஒறைசே ஆகும்.

**எரிபந்தநோய்-**

இந்நோய் பயிரின் எப்பருவத்திலும் தாக்குகின்றது. நோய்க்காரணியான பங்கசுவின் மூலம் இலை, கணுக்கள், நெற் கதிர் நெல்மணியின் பல்வேறு இடங்களில் பாதிப்புக்கள் ஏற்படலாம். உயர் நாற்று மேடைகளில் வளரும் நாற்றுக்களுக்கு இந்நோய் இலகுவாக ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு.

**நோயின் அறிகுறிகள்:-**

பங்கசுவினால் பாதிக்கப்பட்ட நெற்பயிரில் பல்வேறு நரை நிறமான புள்ளிகள் காணப் படும். இப்புள்ளிகள் ஆரம்பத்தில் நுண்ணிய கோடு போல் தோன்றும். பின்னர் படிப்படியாகப் பெரிதாகி கண் போன்று காணப்படும் இதன் இருபுற நுனியும் சிறிதாகும். நெற்கதிர்கள் பங்கசுவினால் தாக்கப்படும் போது தாக்கப்பட்ட நெற்கதிர்கள் கருமை நிறமாக அவ்விடத்தில் முறிந்து விழும். இதை கழுத்தழுகல் நோய் என்றும் கூறுவார்கள். இவ்வாறு கதிர்கள் அழுகும் போது அவற்றில் தோன்றும் மணிகள் நிரம்பாது சப்பியாகக் காணப்படும்.



**இந்நோய் ஏற்படுவதற்கு ஏற்ற சூழல்:-**

கூடிய சாரீரப்பதன், அடிக்கடி பெய்யும் மழை, குளிரான காலநிலை நிலவும் காலத்திலும், காலையிலும், இரவிலும் இலையிலும் தாவரத்தின் வேறு பகுதிகளிலும், பனித்துளி காணப்படல் என்பன நோய் பரவுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதிகளவு நைதரசன் பசளை(யூறியா) இடல், அதிக அடர்த்தியாகப் பயிர்கள் இருக்கத்தக்கவாறு விதைத்தல் என்பனவும் நோய் இலகுவாக ஏற்பட ஏதுவாகின்றது.

**நோய் பரவுதல்:-**

காற்று, நீர் நோயால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களின் பாகங்கள் ஆகியவற்றின் மூலம் நோய்க் காரணியான பங்கசு பரவுவதால் நோய்கள் தோன்றுகின்றன.

**கட்டுப்படுத்தல்:-**

நோயைக் கட்டுப்படுத்த இலகுவான வழி எரிபந்த நோயை எதிர்த்து வளரக் கூடிய BG 300 (3மாதம்) BG 301(3மாதம்),BG 302 (3மாதம்), AT303 (3மாதம்),BW 346,BG 94-1 போன்ற 3 1/2 மாத நெல்லினத்தைப் பயிரிடுதல் சிறந்த வழிமுறையாகும். நோய் அதிகளவு காணப்படும் பிரதேசங்க ளில் உயர் நாற்று மேடைகளுக் குப் பதிலாக தாழ் நாற்று மேடைகளை ஆயத்தம் செய்வது

சிவகமலா

முக்கியமானதொன்றாகும். அதே போல் பயிர்களுக்கு அதிகளவு யூறியாப் பிரயோகம்,மற்றது அடர்த்தியாக விதைப்பதும் பொருத்தமானதல்ல. நோயின் மூலம் பெருமளவு விளைச்சல் குறையும் எனக் கருதும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே நோயைக் கட்டுப்படுத்த விவசாய இலாகாவினால் சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினிகளைத் தெளித்து இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். மேலதிக விபரங்களுக்கு உங்கள் பகுதி விவசாய போதனாசிரியரைச் சந்தித்து .ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் வயல்களில் எரிபந்த நோய் ஏற்படின் சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினிகளை உபயோகியுங்கள். பென்றே, கினோசான், ககுமின,பொலிகர், பியுஜியோன் போன்ற பங்கசு நாசினிகளில் ஏதாவது ஒன்றை உபயோகித்து கட்டுப்படுத்தலாம். இதற்கு மாறாக வி.பி.எம்.சி. மருந்து பாவித்தலை உடன் தவிர்த்துக்கொள்ளவும். வி.பி.எம்.சி மருந்து பாவிப்பதாயின் அருகிலுள்ள விவசாயப் போதனாசிரியரிடம் மேலதிக ஆலோசனை பெற்று உங்கள் வயல்களில் ஏற்பட்டு வரும் எரிபந்த நோயைக் கட்டுப்படுத்துங்கள்.

**மடல் வெளிறல் நோய்-**

இந்நோய் பங்கசுவினால் ஏற்படுகின்றது. இது உச்சளவில் மட்டம் பெயர்ந்த பின்னரே இந்நோய் அனேகமாக நெற்பயிரில் ஏற்படுகின்றது. நெற்பயிரின் தண்டை மூடியுள்ள இலை மடலிலேயே நோய் பெருமளவு ஏற்படுகின்றது. நோய் பரவுவதற்குச் சாதகமான காலநிலை நிலவும் போது இந்நோய் ஏற்படுகின்றது.

**நோயின் அறிகுறிகள்:-**

இந்நோயின் விசேட அறிகுறி இலை மடலில் முட்டை வடிவான அல்லது நீள்வட்ட வடிவமான பச்சை கலந்த நரை நிறமான புள்ளிகள் தோன்றுவதாகும். காலம் செல்லச் செல்ல இப்புள்ளிகள் பெரிதாகி ஒன்றுடன் ஒன்று இணையும். அச்சமயத்தில் இலை மடல் நரை வைக்கோலாக நிறம் மாறும். நோய் அதிகளவு ஏற்பட்ட வயலில் தத்தி எரிவு போன்ற தோற்றம் காணப்படும். நோய்கள் அதிகமாகக் காணப்பட்ட நெற்பயிரில் சப்பிகளே காணப்படும்.

**இந்நோய் பரவுவதற்குச் சாதகமான சூழல்:-**

அதிக வெப்பமும் ஈரப்பதனும் கொண்ட காலநிலை நிலவும் போது நோய்க்காரணியான பங்கசு நெற்பயிரில் வேகமாகப் பரவுகிறது. வயலில் நோய் இலகுவாகப் பரவுவதற்கு ஏதுவான காரணிகளில் நைதரசன் பசளை (யூறியா) இடல்,அதிக அடர்த்தியாக விதைத்தல்,அதிக அளவு களைகள் வயலில் காணப்படல் என்பன பிரதான இடத்தை வகிக்கின்றன.

**நோய் பரவுதல்:-**

நோயால் பாதிக்கப்பட்ட நெற்பயிரில் பங்கசு இழைகள் இறுக்கமாகி பெரிய கடுகு போன்ற தோற்றமுடைய பகுதிகள் மண்ணில் சேரும். நிலத்தைப் பயன்படுத்தும் போது இந்தப் பங்கசு இழைகள், மண், நீர் ஆகியவற்றுடன் கலந்து வயல் முழுவதும் பரவுவதால் நோய் ஏற்படும்.

**நோய் கட்டுப்படுத்தல்:-**

1. வயலில் அடர்த்தி இல்லாது பயிர்களை நாட்டவும்.
2. சமச்சீரான பசளையைப் பிரயோகிக்கவும்.
3. யூரியாவை அதிகளவு இட வேண்டாம்.
4. இலை மடலில் நன்கு படும்படி பொருத்தமான பங்கசு நாசினியை விசிறவும்.

விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினிகளை விசிறவும். மொன்சரேன், மொன்கற் என்ற பங்கசு நாசினிகளைப் பயன்படுத்தலாம். உங்கள் வயல்களில் இந்நோய் காணப்பட்டால் அருகே உள்ள விவசாயப் போதனாசிரியரிடம் மேலதிக விபரங்களைப் பெற்று உங்கள்நெல் வயல்களிலிருந்து உச்சவிளைவைப் பெறுவீர்கள் என நம்பப்படுகிறது.

## பொருண்மிய பொன்னம்பலத்தார்



ம்.... ம்... அப்பப்பா என்ன வெய்யில் கொழுத்து கொழுத்துது... உதில ஆலடியில மோர் வாங்கிக் குடிச்சால்தான் களைப்படங்கும்.... சரி..சரி... மோரெண்டு சொல்ல உங்களுக்கும் ஆசையாத் தான் இருக்கும்.. .ம்... அதை விடுவம் நான் பாருங்கோ இந்த முறையும் ஒரு ஐஞ்சேக்கர் நெல்லு விதைச்சனான். விளைச்சல் பறவாயில்ல.... இரண்டு ஏக்கர் கச்சான் விதைச்சனான், ஒரு ஏக்கர் உழுந்தும் விதைச்சனான், பறவாயில்ல. பாடுபட்டதுக்கு பயன் எடுத்திட்டன். என்ரை பூமித்தாய் கைவிடேலை பூமித்தாய் ஆரையுமே கைவிடுறேல்லை அன்புவைச்சா. சரியோ, இதை நான் ஏன் சொல்லுறன் எண்டால் பாருங்கோ. முன்னம் இஞ்ச பொருளாதாரத் தடை இருந்தது. அப்ப நாங்கள் வியர்வை சிந்தினனாங்கள். பூமித்தாய் வாரிக்குடுத்தாள். எந்தத் தடையும் எங்களுக்கு வாலாட்டேலாமல் போச்சு. நான் இதைச் சொல்ல நீங்கள் வாய்க்குள்ள முனுமுனுக்கிறியள், போனதைப் பளசு புளிவிட்டுக்கூப்பிடுதெண்டு. நான் புளிவிட்டுக் கூப்பிடேல்ல எப்பவும் எதையும் எதிர்கொள்ளத் தயாரா இருக்கவேணும். எங்கட பொருளாதாரத்தை நாங்கள் தான் கட்டியெழுப்ப வேணும். வியர்வை சிந்தி உழையுங்கோ. பொன் விளையும் பூமி இது. அள்ளித்தரும் ஏற்றுமதிக்கும் வாய்ப்பிருக்கு அப்ப நான் வாறன்....

## விவசாய நிலங்களைத் தரம் உயர்த்த இவை சில ஆலோசனைகள்

விவசாயச் செய்கையைப் பொறுத்தவரை விளைநிலம் என்பது முக்கியமான ஒன்றாகும் எமது விளை நிலமான மண்ணை எடுத்து நோக்குவோமானால, விவசாய நிலத்தின் தன்மையானது உரப்பிரயோகத்தினைப் பொறுத்தே மண்ணின் தன்மையினை அறிய முடிகின்றது.

நிலத்தில் உற்பத்தி பெருகக் கூடிய வகையில் உரங்களைப் பிரயோகம் செய்தல் வேண்டும். பசளைப் பிரயோகம் குறைந்த அளவு கொடுத்து கூடியவிளைச்சலைத் தரும் பயிர்களையும் பிரயோகித்தல் சிறந்ததாகும். அதிகமாக விளையும் பயிர்வகைகளுக்கு குறைந்தளவு உரம் இட்டாலும் அவை ஓரளவு சிறந்த பயனையே அளிக்கின்றன. பயிர்கள் நெருக்கமாகக் காணப்பட்டால் அதன் வளர்ச்சியும் அதன் விளைச்சலும் குறைவாகக் காணப்படும்.

தொழு உரம் போன்ற இயற்கை உரங்களை நல்ல முறையில் தயாரிக்க வேண்டும். இவற்றை விதைப்பதற்கு முன்னர் 3-4 வாரங்களுக்கு முன்னதாகவே நிலத்தில் இட்டு மண்ணோடு மண்ணாகக் கலக்க வேண்டும் நிலத்திற்கு கம்போஸ்டு உரங்களைப் பயன்படுத்தும் போது சிறிதளவு தழைச்சத்தையும் அதனுடன் சேர்ப்பது சிறந்ததாகும். பசளையை இடும்போது பயறு அல்லது மற்றைய பயிர்களையோ இடும்போது சுழற்சி முறைப் பயிர்களாகப் பயிரிட்டோ அல்லது அதனிடையே ஊடு பயிராகப் பயிரிட்டோ சாகுபடி செய்து விளைச்சலைப் பெருக்கலாம். மண்ணில் காணப்படும் கரையாத மணிச்சத்துக்களை இப்பயிர் எடுத்துக் கொண்டு வளர முடிகின்றது. பயிர்களுக்குப் பாசனம் கட்டுப்பாட்டு முறையுடன் செய்து கொள்ள வேண்டும். தேவைக்கு ஏற்ற அளவு பாசனம் செய்ய வேண்டும். இது மண்ணின் தன்மையை அதிகரிக்க இந்த நீர்ப் பாசனமுறை என்பது முக்கிய மாகும். இதற்கு மாறாக நீர் வழங்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். தழைச் சத்து சாம்பல் சத்து போன்றவற்றைப் பாசனநீர் மண்ணின் கீழ்பாகங்களுக்கு எடுத்துச் செல்கின்றது. இவ்வாறு பயிருக்கு உரம் இட்டு 24-48 மணித்தியாலங்கள் கழிந்த பின்னரே தண்ணீரைப் பாச்ச வேண்டும்.

சில வேளைகளில் வரட்சியான நிலங்களுக்கு உரங்கள் இடும் போது சற்று ஈரம் மிகுந்த கீழ் மண் பகுதியில் இடுதல் வேண்டும். மேலுரமாக இடப்பட்ட தழைச்சத்து, சாம்பல் சத்து போன்ற உரங்களை மேல் மண்ணுடன் நன்றாகக் கலக்க வேண்டும். பொதுவாக 1பாகம் யூரியாவையும் 5பாகங்கள் ஈரமண்ணுடன் கலந்து 24 மணித்தியாலங்கள் வரை வைத்து பின்னர் இதனை வயலில் நெற்பயிர்களுக்கு இட்டால் நல்ல பசளைகள் கிடைக்கும். இவ்வாறு மேற்கொள்வதனால் தழைச்சத்து வாயுவாக வெளியேறும் தன்மை குறைவாகக் காணப்படும். நாம் மேற்கொள்ளும் நெற்பயிர்களுக்கு யூரியா பசளை இடும் போது வேப்பம் புண்ணாக்குடன் சேர்த்து இடுவதனால் வாயுவாக வெளியேறும் தழைச் சத்து வெளியேறும் தன்மை குறைவாகக் காணப்படுகின்றது. இச்செயற்கை முறையானது ஐந்து பங்கு யூரியாவுடன் ஒரு பங்கு புண்ணாக்கும் சேர்த்து கலக்க வேண்டும் வேப்பம் புண்ணாக்கைப் பொடி செய்து பாவிப்பது சிறந்தது. இவை போன்ற உரங்களைப் பயிர்களுக்கும், நிலங்களுக்கும் இட்டு எமது விவசாயச் செய்கையினையும், மண்ணின் தன்மையினையும் பெருக்கி வளத்தினை உயர்த்தலாம்.

நிலத்தைச் சரியான முறையில் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். எமது வளத்தைப் பெருக்க வேண்டும். நிலத்திற்கு வேண்டிய உரங்களைப் பயன்படுத்தி கூடிய அளவு இதிலிருந்து பெற்றுக் கொள்ளும் விளைச்சலை உயர்த்தி விவசாயச் செய்கையை மேம்படுத்துங்கள்.

—சி. நிதி—

## பொருண்மிய வாசல்

# சவால்களை எதிர்கொள்ளத் தயாராகும் மாணவர்களை ஊக்குவிப்பது பாடசாலையே

புதிய கல்விச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட போட்டியில் கண்டி மாவட்டத்தில் பரிசு பெற்ற கட்டுரை. இக் கட்டுரை மாணவர்களை ஊக்கப்படுத்தி எதிர்காலச் சவால்களுக்கு வெற்றிகரமான முறையில் முகம் கொடுக்க அவர்களைத் தயார்ப்படுத்துவதில் பாடசாலை வகிக்கும் பங்கினை ஆராய்கிறது.

மாணவர்கள் பாடசாலையில் பெறுகின்ற கல்வி, அனுபவம் ஆகியன அவர்கள் எதிர்காலத்தில் எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர் நோக்குவதற்கு உதவுதல் வேண்டும். இவ்வகையில் பாடசாலையானது மாணவர்களின் திறமைகளை விருத்தி செய்வதற்காக அவர்களைச் சரியான முறையில் ஊக்குவிப்பதில் பிரதான பங்கு வகிக்கின்றது.

தற்காலத்தில் மாணவர்கள் பல்வேறு வகையான சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.விரைவான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக தகவல் புரட்சி ஏற்பட்டுள்ளதனாலும் சமூக, பொருளாதார,அரசியல் மாற்றங்கள் காரணமாகவும் அறிவு வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இதனால் உலக மயமாக்கல்,உலக கிராமம் போன்ற புதிய போக்குகள் காணப்படுகின்றன. இந் நிலையில் கற்றலுக்காக கற்றல் அவசியமாகின்றது.இதற்கேற்ற முறையில் மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டியது பாடசாலையின் பொறுப்பாகும்.

இக்கட்டுரையின் நோக்கம், மாணவர் களை ஊக்கப்படுத்தி எதிர்காலச் சவால் களை வெற்றிகரமான முறையில் எதிர் கொள்வதற்கு ஏற்ற முறையில் அவர்களைத் தயார்ப்படுத்துவதில் பாடசாலை வகிக்கும் பங்கினை ஆராய்வதேயாகும்.பாடசாலையில் மாணவர்களை ஊக்கப் படுத்துவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். கற்றலில் மாணவர்களின் ஈடுபாட்டையும் பங் கேற்பையும் ஊக்குவிப்பதுஆசிரியர்கள் எதிர் நோக்கும் முக்கிய சவாலாகும். இதற் காக அவர்கள் சுவாரஸ்யமான கற்றல் சூழலை வகுப்பறையில் ஏற்படுத்துதல் வேண்டும்.

மாணவர்களின் சுறுசுறுப்பான ஈடுபாடு, அக்கறை என்பன இல்லாமல் மாணவர்கள் கற்றலில் கவனம் செலுத்தமாட்டார்கள். பாடசாலைக் கற்றலில் மாணவர்கள் தாமாகக் கவனம் செலுத்துதல் வேண்டும். அவதானத்தில் ஈடுபட வேண்டும். தமது கற்றலுக்கான பொறுப்பை தாமே ஏற்றல் வேண்டும். இவை எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ள முக்கியமானவை. மாணவர்கள். தமது கற்றலில் தாமே கட்டுப்பாட்டை செலுத்துமாறு எவ்வாறு ஊக்குவிப்பது, எதனை எவ்வாறு கற்றல் வேண்டும் என்பது பற்றிய தீர்மானத்தை மாணவர்களே மேற்கொள்ள எவ்வாறு ஊக்குவிப்பது, மாணவர்களின் ஆர்வங்கள், ஈடுபாடுகள், எதிர்கால அபிலாஷைகள் என்பவற்றுக்கேற்ப கற்றல் இலக்குகளை ஆக்கிக்கொள்ள அவர்களுக்கு எவ்வாறு உதவ முடியும் போன்றன பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

மாணவர்களின் திறமையானது அவர்களது ஆற்றலில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அவர்களது ஊக்கமும் மிகவும் முக்கியமானது. இவ்வகையில் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பாடசாலைகளினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை பற்றி ஆராய்வோம்.

ஆசிரியர் வகுப்பறை முகாமைத் துவத்தினை சிறப்பாக மேற்கொள்ளுதல் வேண்டும். வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவனும் பாடசாலையைப் பொறுத்து முக்கியமானவர் என்பதை உணரவைத்தல் வேண்டும். பாடசாலையின் செயற்பாட்டிற்கு மாணவர்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு அவசியம் என்பனை உணரவைத்தல் வேண்டும். மாணவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுதல் வேண்டும். மாணவர்களை ஊக்குவிப்பதில் ஆசிரியர், மாணவர் உறவு முக்கிமானது. அதாவது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கு மிடையில் சிறந்த சினேகிதபூர்வமான உறவு முறை காணப்படுதல், மாணவர் கற்றலில் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு அவசியமானது.

கல்விச்செயற்பாடுகள் அனைத்தும் மாண வர்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டுமென்ற மாணவர் மையக் கல்வி முக்கிய இடம்பெறுகின்றது. இதன்படி ஆசிரியர் மாணவர்களின் தேவைகளை அடையாளம் கண்டு அவற்றைப் பூர்த்தி செய்யக்கூடியவாறு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆசிரியர் பாடத்தை ஆயத்தம் செய்து கற்பித்தல் அவசியமானது. இதன் மூலம் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுவதோடு, ஆசிரியருக்கு கற்பித்தல் இலகுவானதாக இருக்கும் மேலும் கற்பிக்கும் விடயத்தை சிறுசிறு அலகுகளாகப் பிரித்து, படிமுறை ரீதியாக வளர்த்துச் செல்லுதல் வேண்டும். பாடங்களுக் கிடையேயும் குறிப்பிட்ட பாடத்தின் வெவ்வேறு அலகுகளுக்கிடையிலும் உள்ள தொடர்புகளை தெளிவாக எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

மாணவர்கள் இல வாக விளங்கிக் கொள்ளும் பொருட்டு பாடசாலைச் சூழலுக்குப் பொருத்தமான யதார்த்த வாழ்க்கை உதாரணங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். கற்பித்தலின் போது இலகுவானதிலிருந்து ஆரம்பித்து கடினமானதை நோக்கிச் செல்லுதல் வேண்டும்.

மேலும் மாணவர்களின் கற்றலை இலகுவாக்கப் படங்கள், அட்டவணைகள், வரைவுகள் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்துவதுடன் இலகுவான சாதாரண மொழிநடையினைப் பயன்படுத்துதல் வேண்டும். நீண்ட சிக்கலான மொழிநடையினைத் தவிர்த்தல் சிறந்தது.

கற்றலில் மாணவர்களின் பங்குபற்றலை அதிகளவில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். வகுப்பறை கலந்துரையாடல்களிலும் ஏனைய குழுப் பணிகளிலும் பங்கேற்குமாறு மாணவர்களை ஊக்குவித்தல், அருங்காட்சியகம், வரலாற்று முக்கித்துவம் வாய்ந்த இடங்கள், பூங்கா என்பவற்றுக்கு அழைத்துச்செல்ல வேண்டும். மாணவர்களின் எழுத்துப்பணி, செயற்றிட்டம், கட்டுரைகள், கலைப்பணி என்பன ஏனைய மாணவர்களுக்கு காட்டப்பட்டு அவர்களுடன் பகிர்ந்துகொள்ளப்படும் என அறியும் போது அவர்கள் இவ்வாறான ஒப்படைகளை சிரமப்பட்டுத் திறமையாகத் தயாரிப்பர். மாணவர்கள் குழுக்களாகப் பணியாற்ற ஒழுங்கு செய்து ஆசிரியர் வழிகாட்டியாக செயற்படல், குழுப்பணியில் ஈடுபடும் முறையில் வகுப்பறைச் சூழலை மாற்றி மாணவர்கள் வளங்களைத் தமக்குள் பகிர்ந்து கொள்ளச்செய்தல், ஆசிரியர் முன்மாதிரியாக இருந்து மாணவர்கள் ஒருவருக்கொருவர் உதவி, ஒத்துழைப்பு பணியாற்றுமாறு போதித்தல், மாணவர் கலந்துரையாடலுக்கும் கருத்து வெளிப்பாட்டிற்கும் மாணவர்களின் வாதங்களை மதிப்பீடு செய்யவும் இடமளித்தல் வேண்டும்.

மாணவர்களின் கற்றலை மதிப்பீடு செய்யும் போது உடனடியாகவே மதிப்பீடு தொடர்பான பின்னூட்டலை (Feed Back) வழங்குவதுடன் முதலில் நேரான பின்னூட்டலை வழங்கிப் பின்னர் எதிர்மறையான பின்னூட்டலை வழங்குதல் வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். மாணவர்கள் செயற்பாடுகளைத் திறமையாக மேற்கொள்ளும்போதும் சாதனைகளை நிறைவேற்றும் போதும் பகிரங்கமாகப் பாராட்டுதல் வேண்டும்.

மேலும் மாணவர்கள் தவறுகள் புரியுமிடத்து அவர்களிடம் உள்ள குறைகளைப்பற்றி தனிப்பட்ட முறையில் விமர்சித்தல் வேண்டும் பலர் முன்னிலையில் குறைகளைச் சுட்டிக்காட்டுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

மாணவர்கள் தவறுகள் விடும்போது அது பற்றி நன்கு விசாரித்து அதற்கான காரணங்களைக் கண்டறிந்து எதிர்காலத்தில் அத்தகையதோர் தவறை மீண்டும் விடாத வகையில் தவறு விட்டமையை உணரச்செய்வதுடன் அதனைத் தவிர்ப் பதற்குரிய ஆலோசனைகள், வழிகாட் டல்களை வழங்குதல் வேண்டும். மாண வர்களுக்கு உடல், உளரீதியான தண்டனைகளை வழங்குதலைத்தவிர்த்தல் சிறந்தது. தண்டனை வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படின் அத்தண்டனை நீண்ட நேரம் நீடித்தல் ஆகாது. நவீன முகாமைத்துவக் கருத்தின்படி தண்டனை 2 நிமிடங்களுக்கு மேற்படக்கூடாது. தண்டனையின் இறுதியில் மீண்டும் அம்மாணவன் முன்னர் செய்த நல்ல விடயமொன்றை நினைவுபடுத்தி ஊக்கப்படுத்தத் தவறக்கூடாது.

ஆசிரியர், தனது பரந்த வாசிப்பறிவு, அனுபவம், அர்ப்பணிப்பு, தியாக சிந்தனை என்பவற்றின் மூலம் தமது மாணவர்களுக்கு ஓர் உதாரணமாக விளங்குவதுடன் மாணவர்களையும் பொருத்தமான நூல்களை வாசிக்கத் தூண்டுதல் வேண்டும்.

ஆசிரியர் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை நன்றாக விளங்கியிருத்தல் வேண்டும். மாணவர்கள் ஒவ்வொருவரும் பௌதீக ரீதியாகவும், உள ரீதியாகவும் வேறுபட்டவர்கள். அவர்களுடைய தேவைகளை அறிந்து அதற்கேற்ப வேறுபட்ட முறைகளில் ஊக்குவித்தல் வேண்டும். இதன் பொருட்டு ஆசிரியர் வேறுபட்ட ஊக்கப்படுத்தல் முறைகளை அறிந்திருப்பதுடன் தனது ஊக்கப்படுத்தும் திறனை விருத்தி செய்துகொள்ளுதல் வேண்டும்.

மாணவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆசிரியர் கலந்துரையாடுதல் வேண்டும். மாணவர்களுக்கு பிரச்சினைகளைச் சரியாக அடையாளம் காண்பதற்கும் அவற்றுக்கான காரணங்களை கண்டறிந்து அவற்றை தீர்ப்பதற்குரிய சரியான தீர்மானங்களை மேற்கொள்ளுவதற்கும் வழகாட்டுதல் வேண்டும். மேலும் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஓர் சவாலாகக்கொண்டு அதனை வெற்றிகரமாக முறியடிக்கக்கூடிய திறனை விருத்திசெய்ய உதவுதல் வேண்டும்.

பாடசாலையில் மாணவர்களுக்கு நேரான சிந்தனையைத் (Positive Feeling) தூண்டக்கூடியவாறு வழிநடத்துதல் வேண்டும். அவர்களை நேராகச் சிந்திக்கவும், நேராகப் பேசவும், நேராகச் செயற்பாடுகளில் ஈடுபடவும் தூண்டுதல் வேண்டும். மேலும் எதிர்மறையாக சிந்தித்தலின் அபாயங்கள் பற்றி விளக்குதல் வேண்டும். உடம்பு என்பது உள்ளத்தின் சேவகன் என்பதால் மாணவர்களின் மனதில் நல்ல சிந்தனைகள் உருவாகத்தூண்டுதல் வேண்டும்.

பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், போன்ற கல்வி இணைச்செயற்பாடுகள் மூலமும் மாணவர்களை வேறுபட்ட திறன்களையும் கலை ஆற்றல்களையும் இனங்கண்டு அவற்றை விருத்தி செய்வதற்கு சந்தர்ப்பங்களை வழங்கி ஊக்குவித்தல் வேண்டும்.

பாடசாலையில் மாணவர்களுக்கு முரண்பாட்டு முகாமைதொடர்பான திறனை விருத்தி செய்தல் அவசியமானது. மாணவர்கள் பாடசாலையில் மட்டுமன்றி வீட்டிலும் சமூகத்திலும் இணக்கப்பாடின்மை காரணமாக முரண்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் இச் சூழல் நிலைகளில் முரண்பாடுகளைச் சரியாக விளங்கி அவற்றைக் குறைத்து இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் வழிமுறைகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் எதிர்நோக்கும் முரண்பாடுகளையும் ஓர் சவாலாக எடுத்து அதனைத் தீர்க்கும் திறனை விருத்தி செய்யமுடியும்.

பாடசாலையில் காணப்படும் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பன பற்றி ஆய்வு செய்தல் வேண்டும். இதன் மூலம் (Swot Analysis) பலங்களை மேலும் விருத்தி செய்ய முடிவதுடன் வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொள்ளவும் பலவீனங்களை நீக்கக்கூடியவாறும் அச்சுறுத்தல்களை முறியடிக்கக்கூடியவாறும் திட்டங்களைத் தீட்ட முடியும்.

பாடசாலையின் தொலைநோக்கு (Vision) குறிக்கோள் (Mission) இலக்குகளும் நோக்கங்களும் (Goals And Objectives) பற்றிய தெளிவான விளக்கத்தை பாடசாலையிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்துதல் வேண்டும். மேலும் மாணவர்களை கல்வியில் தமக்குப் பொருத்தமான இலக்குகளைத் தெரிவு செய்யவும் அதனை அடையும் பொருட்டு கற்றலில் ஈடுபடவும் தூண்டுதல் வேண்டும்.

பாடசாலையில் மாணவர்களுக்கு நேரமுகாமை பற்றிய அறிவினை வழங்குதல் வேண்டும். தற்காலத்தில் குறித்த காலத்தினுள் எல்லாச் செயற்பாடுகளையும் மேற் கொள்வதற்கு நேர வரையறை ஒரு தடையாகக் காணப்படுகிறது. இச்சவாலை முறியடிப்பதற்கு நேரமுகாமைபற்றிய அறிவு, பயிற்சியை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

மாணவர்களை மேற்கொள்ள வேண்டிய வேலைகள் தொடர்பாக நாளாந்த, வாராந்த, மாதாந்த, காலாண்டு போன்ற அடிப்படைகளில் திட்டங்களைத் தயாரித்து அதற்கமைய செயற்பாடுகளை மேற்கொள்ளத் தூண்டுதல் வேண்டும். இதனூடாக மாணவர்களின் செயற்றிறனை அதிகரிக்க முடிவதுடன் திறனற்ற நேரமுகாமை காரணமாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள், மன அழுத்தம் என்பனவற்றைத் தவிர்க்கவும் முடியும்.

கற்றல் என்பது ஒரு சமூகச் செயற்பாடாகும். பாடசாலை மூலம் சமூக வாழ்க்கையில் பிள்ளைகள் பங்கேற்பது கற்றல் செயற்பாட்டின் பிரதான அம்சமாகும். பாடசாலைக் கல்வியின் போது மாணவர்கள் கூட்டாகவும், குழுக்களாகவும் ஒத்துழைத்துச் செயற்பட வாய்ப்புக்கள் இருத்தல் வேண்டும். சமூக ரீதியாக இணைந்து பணியாற்றுவதால் மாணவர்களின் கல்விச் சித்தி அதிகரிப்பதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. அதற்குக் கற்றலை மேம்படுத்தக்கூடிய சமூக செயற்பாடுகளையே ஆசிரியர்கள் ஊக்குவிக்கவேண்டும்.

சாதாரணமாகவே மாணவர்களுக்குச் சமூக செயற்பாடுகள் சுவாரஸ்யமானவையாக இருக்கும். அவை மாணவர்கள் கற்றல் பணிகளில் ஈடுபாட்டுடன் பங்குகொள்ளச் செய்ய உதவும். மாணவர் கற்றலுக்கு உதவும் முறையில் சமூகப் பங்கேற்பை ஆசிரியர்கள் ஊக்குவித்தல் வேண்டும்.

# அறிவித்தல்

**முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் இரண்டாவது அதே இடத்தில் சேவை.**

**அனுசரணை :- நீதி, இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு.**

துணுக்காய், மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுகளில் வாழும் பொது மக்களின் நன்மை கருதி முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தலைமையில் அதே இடத்தில் சேவை கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன.

இடம் :- மல்லாவி மத்திய கல்லூரி.

காலம் :- 14.03.2003 வெள்ளிக்கிழமை.
15.03.2003 சனிக்கிழமை.

நேரம் :- முற்பகல் 08. 30 மணி தொடக்கம் பிற்பகல் 04.30 மணி வரை

வழங்கப்படவுள்ள சேவைகள்:-

01. தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல்.
02. மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பரீட்சை நடாத்துதல்.
03. காலம் கடந்த பிறப்பு, இறப்பு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளலும், சான்றிதழ் வழங்கலும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை துணுக்காய், மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள லாம்.

இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-7806)

---

உ
சிவமயம்

## கரைச்சி
## புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல்தின தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்

மேற்படி ஆலய பொங்கல் விழா 18-03-2003 செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது என்பதை அறியத்தந்து பொங்கல் நேர்த்திப் பொருட்கள் தண்டல், எதிர்வரும் 12-03-2003 புதன் தொடக்கம் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு நகர், விசுவமடு, பிரமந்தனாறு, புன்னைநீராவி, உடையார்கட்டு, சுதந்திரபுரம், தேவிபுரம் போன்ற பகுதிகளுக்கு ஆலய சின்னம் பொறிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களுடன் உழவு இயந்திரங்களில் தொண்டர்கள் வருகை தரவுள்ளனர் என்பதை நேர்த்திப் பொருள் கொடுக்கும் அடியவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**ஆலய பரிபாலனசபை**

(சி-8004)

---

மூண்ட பெருந்துயர் சுமந்து...

## 31ஆம் நாள் நினைவலைகள்!

வானுறையும் தெய்வத்துள் அமர்ந்த தந்தை

## சரவணை சின்னத்துரை அவர்கள்

உருவாய் மண்ணில்
**16-04-1925**

அருவாய் விண்ணில்
**08-02-2003**

மணமக்களாக நாம் வர
மனமாக வரவேற்றீர்களே ஐயா!
இனியெப்போ வருவீர்கள் என்றீர்களே
நாம் வர முன் எங்கு சென்றீர்கள் ஐயா!
பாதியில் எம் பாசம் அறுத்து
பாராமல் சென்றீர்களே ஐயா!
இனி உங்கள் இன் முகத்தை
நாம் காண்பதெப்போ ஐயா!
ஓரிரு நாட்களுக்கு முன் கேட்ட குரல்
ஓராண்டானாலும் இனிக் கேட்காதையா!

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

**முரளி- வசீகரி**
**(சின்னத்துரை குடும்பத்தினர்)**

(3005)

---

# 2003.03.14ஆம் நாள் முதல்....
# பளை நகரிலும்
# தன் பணி தொடங்குகின்றது

# தமிழீழ வைப்பகம்



உங்கள் வளமான வாழ்விற்கான
பல்வேறுபட்ட
மேம்பட்ட சேவைகளுடன்

உங்கள்
நம்பிக்கையின்
சின்னம்

## உங்கள் அருகில் உங்கள் தெரிவில்
## உங்களிற்காகவே
# தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகம் BANK OF TAMILEELAM

## தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

சி-8002

## சிந்தனைக்கு



சமாதான வழி மூலம் எமது மக்களுக்கு நீதி கிடைக்குமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 10-03-2003

## ஒத்துழைப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருவதாக நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளமை அரசியல் சார்ந்த பேச்சல்ல. சமாதான முயற்சிகளில் பங்கேற்கும் ஒருவரின் அவதானிப்பின் அடிப்படையிலான பேச்சாகும்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகளை நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அறிவித்திருப்பது போன்று வேறு வெளிநாட்டு இராஜதந்திரிகள் எவருமே அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், சர்வதேச மத்தியஸ்துவம் என்ற நிலை உருவாகியதில் இருந்து எரிக் சொல்ஹெய்ம் இவ்விவகாரத்துடன் நெருக்கமான பரிச்சயமானவராக உள்ளார். அத்தோடு, விடுதலைப் புலிகள் தரப்பினருடன் அதிக சந்திப்புக்கள் நடத்தியவராகவும் உள்ளார்.

இந்நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும், விடுதலைப் புலிகள் குறித்தும் எரிக் சொல்ஹெய்ம் வெளிப்படுத்தும் அபிப்பிராயமானது பெரும்பாலும் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் ஒன்றாகவே இருக்கும். இதற்கு எரிக் சொல்ஹெய்ம் பக்கச் சார்புடன் செயற்பட வேண்டிய தேவையும் அற்றவர் ஆகும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சமாதான முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழ்ங்கி வருகின்றனர் என்பதை கண்டறிவதற்குப் பெரியளவினதான ஆய்வு எதையும் மேற்கொள்ளத் தேவையில்லை. அவர்களின் செயற்பாடுகளே அவற்றை வெளிப்படையாக உணர்த்துபவையாகவுள்ளன.

ஒரு புறம் விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்கெனவும், அவற்றில் முன்னேற்றம் காண்பதற்கெனவும் தம்மாலான ஒத்துழைப்பை வழங்கியே வந்துள்ளனர். ஆரம்பத்தில் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை அறிவித்ததில் இருந்து அண்மையில் போர்நிறுத்த உடன்பாட்டை மீறியதான விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்களை விடுவித்ததில் இருந்து புலிகள் சமாதான முயற்சிகளுக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளனர்.

அதாவது, யுத்த நிறுத்தம் ஒன்று பிரகடனப்படுத்துவதற்கான புரிந்துணர்வு உடன்பாடு செய்ததில் இருந்து, தம்மிடமுள்ள யுத்தக் கைதிகளை விடுவித்தது வரையில் புலிகளின் சமாதான முயற்சிகளுக்குத் தமது ஒத்துழைப்பை வழங்கியே வந்தனர். தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் மனிதாபிமான அடிப்படையிலும், நல்லெண்ண அடிப்படையிலும் காலத்திற்குக் காலம் சமிக்கைகளை வெளியிட்டே வந்துள்ளார்.

அதிலும் குறிப்பாக, வெளியாருடனான, பெரும்பாலான சந்திப்புக்களின்போது, அவ்வக் காலங்களில் முனைப்பாகவுள்ள பிரச்சினைகளில் விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டே வந்துள்ளார். அதாவது, தம்மைச் சந்தித்தவர்களின் முயற்சிகளுக்கு மதிப்பளித்து தேசியத் தலைவர் பிரபாகரன் அவ்வாறு நடந்து கொண்டுள்ளார்.

இது தவிர சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரான செயற்பாடுகளிலும் விடுதலைப் புலிகள் பெரும் விட்டுக் கொடுப்புடன் செயலாற்றி வருகின்றனர் என்றே கூறுதல் வேண்டும். எடுத்துக் காட்டாக புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்தாகி ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையிலும், அதன் சரத்துக்களில் பல இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையிலும், புலிகள் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகளைத் தோற்றுவிக்க முனையவில்லை.

அடுத்ததாக, யுத்தநிறுத்த காலத்தில் சிறிலங்கா ஆயுதப் படையினர் மேற்கொண்ட பல யுத்த நிறுத்த மீறல்கள் - ஆத்திரம் ஊட்டும் செயல்கள் என்பனவற்றையும் புலிகள் பொறுத்துக் கொண்டுள்ளனர். இதனைப் புலிகளின் பலவீனம் என்றோ இயலாமை என்றோ யாராவது கருதுவர்களேயானால் கடந்த காலத்தில் புலிகள் தொடர்பான மதிப்பீட்டில் தவறிழைத்தது போன்றே இதிலும் இழைத்தவர்களாகிவிடுவர்.

ஆனால், விடுதலைப் புலிகள் அவ்வாறான முடிவுகள் எதையும் மேற்கொள்ளாது பொறுமை காத்தல் என்பது - சமாதான முயற்சிகளைத் தொடர வழங்கும் ஒத்துழைப்பின் காரணமாகவே ஆகும். இந்த வகையில் விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளுக்குக் காட்டிவரும் ஆதரவையும், அக்கறையினையும் அவதானிக்கும் எவரும் சமாதான முயற்சிகளில் புலிகள் காட்டும் ஆதரவைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

# சாகும்வரையிலான உண்ணாவிரதத்தில் குதிக்கத் தொண்டர் ஆசிரியர்கள் முடிவு

### போராட்டம் நேற்றும் தொடர்ந்தது

(மட்டக்களப்பு)

நிரந்தர நியமனம் கோரி மட்டக்களப்பு,அம்பாறை மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் நேற்று ஏழாவது நாளாகவும் தமது போராட்டத்தினை தொடர்ந்தும் நடத்துகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை வரை சத்தியாக்கிரகப் போராட்டத்தினை மேற்கொண்டிருந்த தொண்டர் ஆசிரியர்கள் தற்போது சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் தமது கோரிக்கை நிறைவேற்றப்படாது விட்டால் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தினை மேற்கொள்ளப் போவதாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதி அரசை கலைக்கும் அதிகாரத்தை எப்போது பாவிப்பாரெனக் கூறமுடியாது

### - பொ.ஐ.மு. பேச்சாளர் சரத் அமுனுகம

(கொழும்பு)

அரசாங்கத்தை கலைக்கும் அதிகாரத்தை சனாதிபதிக்கு மட்டுமே அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. அவர் எப்பொழுது அந்த அதிகாரத்தைப் பாவிப்பாரெனக் கூற முடியாது என பொ.ஐ. முன்னணிப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது; அரசாங்கம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கம் எமக்கில்லை. அரசின் சமாதான முயற்சிகளை நாம் பூரணமாக ஆதரிக்கின்றோம். ஆனால் தவறுகளைச் சுட்டிக் காட்ட நாம் தவறமாட்டோம். பிழைகளைச் சுட்டிக்காட்டுவதால் நாங்கள் சமாதானத்திற்கு எதிரானவர்களெனக் கூற முடியாது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொ.ஐ. முன்னணியும் ஜே.வி.பியும் கூட்டாகப் போட்டியிடும் சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றையே நாம் ஆதரிப்போம்.

அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு ஒரு வருடம் பூர்த்தியாகிய நிலையிலும் இரு தரப்பினரும் யுத்த நிறுத்தத்தை மீறுவதாக ஒருவரையொருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். எனவே புரிந்துணர்வு உடன்படிக்கை திருத்தி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கென இந்திய அரசாங்கம் 200 மில்லியன் ரூபாவை இலங்கை அரசுக்குக் கடனாக வழங்கியுள்ளது. ஆனால் அந்தக் கடனை பயன்படுத்தாது ஒரு நெல்மணியைக்கூட உற்பத்தி செய்யாது, இஸ்ரேல் நாட்டில் இருந்து அரசாங்கம் களஞ்சியக் கூடாரங்களை இறக்குமதி செய்கின்றது.

இந்த இறக்குமதியில் பெரும் நிதி மோசடி இடம்பெற்றுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# பதிவாளர் அலுவலகம் முல்லை நகரில் இயங்குகிறது

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்ட பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் அலுவலகம் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்கி வருகின்றது.

இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இயங்கி வந்த முல்லை மாவட்ட பிறப்பு, இறப்பு,விவாகப் பதிவாளர் அலுவலம் கடந்த 05 ஆம் திகதி முதல் முல்லைத்தீவில் இயங்கிவருகின்றது என மேலதிக மாவட்டப் பதிவாளர் சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும் பிறப்பு, இறப்பு விவாக அத்தாட்சிப்பத்திரங்களுக்கான ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் தற்போது மேற்கொள்ளலாம எனவும் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் வந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இரண்டு கட்டங்களாக உயர்தரப் பரீட்சை

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சை இரண்டு கட்டங்களாக நடாத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முதலாம் கட்டம் அடுத்த மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகி மே மாதம் 3 ஆம் திகதி முடிவடையும். பரீட்சை நிலையங்கள் சம்பந்தமாகவும் ஏனைய ஒழுங்குகள் பற்றியும் பின்னர் அறிவிக்கப்படவுள்ளது என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

# அரண்கள் அகற்றுதல்

போர்க்காலத்தில் அமைக்கப்பெற்ற பாதுகாப்பு அரண்கள், பதுங்கு குழிகள் ஆகியவற்றை புல்டோசர் மூலம் சீர் செய்வதற்கு அனுபவம் வாய்ந்த உள்ளூர் முகவர்களிடமிருந்து விலைக்கூறுபுள்ளிகள் அரச அதிபரால் கோரப்பெற்றுள்ளது. இது தொடர்பான விபரங்களை அரச அதிபர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனக் கிளி. அரச அதிபர் அறிவித்துள்ளார்.

# மீளக்குடியமர்ந்த கிராமங்களில் தபாற்சேவையை இலகுபடுத்தல்

கிளிநொச்சி நகரை அண்டிய கிராமங்களில் தபாற் சேவை இலகுபடுத்துவதற்காக மீளக்குடியமர்ந்த கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு இலக்கமிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்ட உதயநகர் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள வீடுகளுக்கு இலக்கமிடும் வேலைகள் உதயநகர் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் கிராம அலுவலரும் இணைந்து நேற்று முன்தினம் வேலைகளை ஆரம்பித்துள்ளதாக உதயநகர் மேற்கு கிராம அலுவலர் இரா. வேலுப்பிள்ளை தெரிவித்தார்.

# வங்கிக் கடன்களை செலுத்தாதோர் மீது நடவடிக்கை எடுக்க சட்டங்கள் போதாது

### நிதி அமைச்சர் கே. என். சொக்ஸி

(கொழும்பு)

அரசாங்க வங்கிகளில் கடன் பெற்று மீளச் செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தற்போது அமுலில் உள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லை என்று நிதி அமைச்சர் கே. என்.சொக்ஸி பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அரச வங்கிகளில் கடன் பெற்று மீளச் செலுத்தாமல் இருக்கும் 96 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட அமைச்சர் சொக்ஸி, அவர்களின் பெயர்களை வெளியிடுவதற்கு அவசியம் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

கடனைச் செலுத்தாது இருப்பவர்களுக்கு எதிராகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.




மட்டக்களப்பில் நேற்று முன்தினம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஊர்வலம்

## முறைசாராக் கல்வி

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையில் 2003 ஆண்டிற்கான முறைசாராக்கல்வி ஆரம்பிக்கப்படவுள்ளது.

முறைசாராக்கல்வி கற்கை நெறியில் மின் இணைப்பு தொழில் பயிற்சிபெற விரும்புவோர்கள் தமது விண்ணப்பங்களை ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய அதிபரிடம் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (பா)

# ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்தியாவிற்கு மிலிந்தமொறகொட விஜயம்!

## -ஜெயலலிதாவையும் சந்திப்பார்

(கொழும்பு)

இந்தியாவிற்கும் சிறிலங்காவிற்குமிடையிலான இராணுவ, பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கோடு அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கு விஜயம் செய்து பிரதமர் வாஜ்பாய், வெளியுறவுத்துறை அமைச்சர் உள்ளிட்ட பலரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல், காங்கேசன்துறை கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட இரண்டு கப்பல்களை மீட்க இந்தியாவின் உதவியைப் பெறுதல், பலாலி விமான நிலையப் பகுதியை அபிவிருத்தி செய்தல், சனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பிரிவுகளில் கடமையாற்றும் படையினருக்கு இந்தியாவின் சிறப்பு படையான கறுப்புப் பூனை படைமூலம் பயிற்சிகளை வழங்குதல், இந்தியாவிடம் இருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்தல் மற்றும் இலங்கையையும், இந்தியாவையும் இணைக்கும் பாலத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் கூட்டாக அமைத்தல் உட்பட பல விடயங்கள் இப்பேச்சுக்களின்போது ஆராயப்பட்டன.

இந்த விடயங்கள் குறித்து அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகவே அமைச்சர் மிலிந்த மொறகொட விரைவில் இந்தியாவிற்குச் செல்லவுள்ளார்.

இப்பயணத்தின்போது இவர் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

## ஓராண்டு நிறைவு விழா

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் ஓராண்டு நிறைவு விழா நாளை மாலை 3.00 மணியளவில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் திலீபன் மருத்துவமனையின் அபிவிருத்திக்கான நிதிய அங்குரார்ப்பணம் நடைபெறவுள்ளது. (05)

## அரங்காற்று நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

"இருபாலாரும் இருபாலகரும்" என்னும் விபரண அரங்காற்று நிகழ்வு தற்போது கிளி. பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றது.

கிளி. மாவட்ட அழகியல் கலாமன்றத்தினால் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் மேற்படி அரங்காற்று நிகழ்வானது, பெண்ணியம் சம்பந்தமான கருத்து நிலையினை எடுத்தியம்பிவருகின்றது. மேற்படி இவ்வரங்கு 12ஆம் திகதி அக்கராயன், கோணாவில் கிராமத்தில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## "வேர்கள் துளிர்க்கும்" சிறுகதை வெளியீட்டு விழாவும், பரிசளிப்பும்

(அலுவலக செய்தியாளர்)

கப்டன் வானதி வெளியீட்டகத்தினரின் "வேர்கள் துளிர்க்கும்" தமிழீழப் பெண்களின் சிறுகதை வெளியீட்டு விழாவும் மற்றும் மாபெரும் இலக்கியப் போட்டி - 2002 இன் பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் 12 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## - உலகக்கிண்ணப் போட்டி -
# இந்தியா - சிறிலங்கா இன்று மோதுகின்றன!

சிறிலங்கா - இந்திய அணிகளுக்கிடையிலான பரபரப்பான உலகக்கிண்ண 'சுப்பர்சிக்ஸ்' போட்டி யோகன்னஸ் பேர்க் வொண்டரஸ் மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான 70 ஒருநாள் போட்டிகளில் இந்தியா 39 வெற்றிகளையும் 29 தோல்விகளையும் சந்தித்துள்ளது.

இரு அணிகளுக்கிடையில் நடைபெற்ற கடைசி 12 போட்டிகளில் இரு அணிகளும் தலா 5 வெற்றிகளை பெற்றுள்ளன. உலகக்கிண்ண வரலாற்றில் இரு அணிகளும் ஒன்றை ஒன்று நான்கு தடவைகள் எதிர்த்தாடியுள்ளன. இதில் சிறிலங்கா மூன்று தடவைகளும், இந்தியா ஒரு தடவையும் வெற்றி பெற்றுள்ளன.

எனினும் 1999ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டியில் இந்தியா 157 ஓட்டங்களால் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த 2000ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் சிறிலங்கா அணி 245 ஓட்டங்களால் இந்தியாவை தோற்கடித்திருந்தது. இதில் ஜெயசூரியா 189 ஓட்டங்களை பெற்றமையும், இந்தியா 54 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, இரு அணிகளும் கலந்து கொண்ட மினி உலகக்கிண்ண இறுதிப் போட்டி மழை காரணமாக சமநிலையில் நிறைவு பெற்றது. இந்நிலையில் இன்றைய போட்டி ரசிகர்களுக்கு அரியதொரு விருந்தாக அமைவது உறுதி.

# மயிலந்தனையில் மீளக்குடியேற படையினர் அனுமதி மறுப்பு

(லண்டன்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான மயிலந்தனையில் மக்கள் மீளக்குடியேற சிறிலங்காப் படையினர் அனுமதி மறுத்திருக்கின்றனர்.

23 ஆவது படையணி கட்டளைத்தளபதி ஏ.ஆர்.பாலசூரிய மீளக் குடியேறச் சென்ற மக்களை திருப்பியனுப்பியுள்ளார்.

இதனால் சர்வதேச நிறுவனம் ஒன்றின் உதவியுடன் மீளக்குடியேறச் சென்ற மக்கள் வாழைச்சேனை - அகதி முகாமுக்கு திரும்பிச் சென்று மீண்டும் அங்கு தங்கியுள்ளனர்.

# செஞ்சிலுவைச் சங்கத்தால் கூரைவிரிப்பு வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

ஸ்பானிய செஞ்சிலுவைச்சங்க உதவியுடன் 'எக்கோ' திட்டத்தின் மூலம் கிளி. மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக வீட்டுக் கூரை விரிப்புக்கள் எதிர்வரும் 12ஆம் திகதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கூரைவிரிப்புக்களைப் பெறுவதற்கு வருகை தருபவர்கள் 'எக்கோ' நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டையினை கொண்டு வரும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

12ஆந் திகதி காலை பூநகரி ஞானிமடம், மட்டுவில்நாடு மேற்கு, பரமன்கிராய், கௌதாரிமுனை, செட்டியகுறிச்சி ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணிவரை பூநகரி அ.பு. கழகத்தில் வைத்தும் காலை 10.30 மணி முதல் 11.00 மணிவரை உமையாள்புரம், குமரபுரம் மக்களுக்கு குமரபுரம் பாடசாலையில் வைத்தும், பகல் 11.30மணி முதல் 12.00மணி வரை பரந்தன் மக்களுக்கு 1ஆம் கட்டை கத்தோலிக்க தேவாலயத்தில் வைத்தும், பி.ப. 1.00 மணிமுதல் 1.30மணி வரை பெரிய பரந்தன் மக்களுக்கு அன்ரன் வீட்டுச் சந்தியில் வைத்தும், பி.ப. 2.30மணி முதல் 3.30மணி வரை உருத்திரபுரம் வட/கிழக்கு மக்களுக்கு உருத்திரபுரம் த.அ.அ.பு. கழகத்தில் வைத்தும், பி.ப. 5.00 மணி முதல் 6.00 மணிவரை ஆனந்தபுரம் மக்களுக்கு கிளிநொச்சி இலங்கை செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் வைத்தும் கூரை விரிப்புக்கள் வழங்கப்படவுள்ளதென கிளி.மாவட்ட செஞ்சிலுவைச்சங்க செயலாளர் க.கணேஸ் தெரிவித்துள்ளார். (சோ)

## ஒத்திவைப்பு

முல்லைத்தீவு வலய கல்விப் பணிப்பாளரின் ஒழுங்கமைப்பில் நாளை நடைபெறவிருந்த அதிபர்களுக்கான கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டம் நாளை மறுதினம் காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என முல்லை வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்..

இதேவேளை நாளை மறுதினம் நடைபெறவிருந்த உடற்பயிற்சிப் போட்டி திட்டமிட்டவாறு நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

### கச்ச தீவு...

விக்கப்படுகிறது. நேற்றுக் காலை திருநாள் திருப்பலி பாம்பன் பங்குத்தந்தை போல்ராஜ் அடிகளார் நெடுந்தீவு பங்குத்தந்தை ஜெயநேசரட்ணம் அடிகளார் ஆகியோரால் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

### சமாதானப்...

ழைப்பு வழங்க வேண்டும் என்றும் கூறினார். சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக படையினருக்கு விளக்கம் அளிக்கும் கலந்துரையாடல் வவுனியாவிலுள்ள வன்னி ராணுவக் கட்டளைத் தலைமையகத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இக் கருத்துக்களை முன்வைத்தார்.

சமாதான பேச்சுவார்த்தையில் அரச தரப்புக்கு தலைமைதாங்கும் ஜீ.எல். பீரிஸ் ஆயுதப்படையினர் எழுப்பிய கேள்விகளுக்கும் பதிலளித்தார். இதன்போது ஆயுதப்படையைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அத்துடன் ஆயுதப்படையினர் சமாதான உடன்படிக்கை ஒன்று உண்மையாக நடைமுறைக்கு வரும்வரை தயாராக இருக்க வேண்டும் எனவும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

### அரசு - புலிகள்...

ஐக்கிய தேசிய முன்னணி மக்கள் மனதில் பாதுகாப்பின்மை, அவநம்பிக்கை என்பவற்றை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### விபத்தில்...

மேற்படி சம்பவம் நேற்று பிற்பகல் 5மணியளவில் இடம்பெற்றது. இதில் வெள்ளைச்செட்டி மருதப்பன், (கொல்லர்புளியங்குளம்), வேல்முருகன் கணேசவேல் ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (பா)

### தமிழீழ நீதி...

பாளர் பரா அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கலந்து கொண்டு சமகால அரசியல் நிலை பற்றி சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும் மற்றும் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (சோ)

### களுத்துறை...

நேற்று ஒன்பதாவது நாளாகவும் இடம்பெற்றுள்ளது.

கைதிகளில் 61 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 35 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் 20 பேர் இரத்தவாந்தி எடுத்து வருகின்றனர். தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும் எனக் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

### புரிந்துணர்வு...

பொதுக் கட்டடங்களில் இருந்து படையினர் இன்னமும் வெளியேறவில்லை. அத்துடன் இயல்பு நிலையை ஏற்படுத்துமுகமாக வீதித்தடைகள் நீக்கப்படாது பல வீதிகள் மூடப்பட்டிருக்கின்றன.

எனவே அரசாங்கம் இனியும் தாமதிக்காது போர்நிறுத்த ஒப்பந்தத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### நோர்வே...

நோர்வே வெளியுறவு அமைச்சர்கள் சிறிலங்கா அரசுடன் பேச்சு நடத்த இருப்பதாகவும் நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### தமிழ் ஆசிரியர்...

ஆசிரியர்களிற்கு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு நீண்ட காலமாக அரசு ஏமாற்றி வருவது குறித்து கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.